நிந்தவூர் பிரதேச சபை
அம்பாறை மாவட்டம்

1. நிதிக்கூற்றுகள்

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மே 06 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மே 21 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான 06கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 05 திகதி பிரதேச சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து நிந்தவூர் பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டில் JCB வாகனத்தை வெளிக்கள வேலைகளுக்கு வாடகைக்கு வழங்கியதன் மூலம் உரிய நபர்களிடமிருந்து பெறவேண்டிய ரூபா 739,500 தொகை கணக்குக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 ஆம் ஆண்டின் இறுதிவரை சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பகுதிகளில் குப்பைகளை சேகரித்து மாற்றம் செய்வதற்காக காரைதீவுப் பிரதேச சபைக்கு செலுத்தவேண்டிய கட்டணம் ரூபா 312,075 தொகை கணக்குக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் சபையில் நிலையான வைப்புக்கள் மீது பெற்றுக்கொள்ளப்பட்ட வட்டி வருமானம் ரூபா 745,713 தொகை கணக்குக்கு கொண்டுவரப்பட்டி ருக்கவில்லை.

(ஈ) களஞ்சியத்தில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மின்சாரப் பொருள் இருப்புக்களின் பெறுமதி ரூபா 218,438 மீளாய்வாண்டில் கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(உ) 2013 தொடக்கம் 2014 ஆம் ஆண்டு இறுதிவரை கிழக்கு மாகாண பிரதம செயலாளரிடமிருந்து கிடைக்கவேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 10,245,676 தொகை கணக்குக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டிற்கான கிழக்கு மாகாண பிரதம செயலாளரிடமிருந்து கிடைக்கவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,353,668 தொகை கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(எ) சபையில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலையான வைப்பு மீதி ரூபா 1,384,249 கணக்குகளில் ரூபா 805,582 தொகையால் குறைத்துக் கணக்கிடப்பட்டுள்ளது.

1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 1980 முதல் 2012 ஆம் ஆண்டு இறுதி வரை நிலுவையாக உள்ள இறைச்சிக் கடைக் குத்தகைப் பணமாகிய ரூபா 3,173,466 தொகையை அறவிடுவதற்கு அல்லது உரிய நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 21 ஆண்டுகளுக்கு மேலாக தெரு விளக்கு மின்பாவனை தொடர்பாக இலங்கை மின்சார சபைக்கு செலுத்த வேண்டிய மின்சார பாவனைக் கட்டணம் ரூபா 2,951,150 தொகையை மீளாய்வாண்டின் இறுதிவரை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2007 ஆம் ஆண்டிற்கு முன்னர் இடமாற்றம் பெற்றுச் சென்ற 05 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா.48,564 தொகையையும், வேலையை விட்டுவிலகிய மற்றும் இறந்துபோன 21 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா.96,810 தொகையையும் இடமாற்றம் பெற்றுச்சென்ற நிறுவனத்திடமிருந்து, அவர்களது பிணையாளிகளிடமிருந்து அல்லது ஓய்ூதிய பணிக்கொடையிலிருந்து அறவிடுவதற்கு 2015 மே 25 ஆந் திகதி வரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

இரண்டு வருடங்களுக்கு மேலாக வைப்புக் கணக்கில் உள்ள ரூபா 742,110 கூட்டுமொத்த தொகையான காலங்கடந்த வைப்புகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 அமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2014 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 2,566,378 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் வருமானத்திலும் கூடிய மீண்டுவரும் செலவினம் ரூபா 1,608,656 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா 4,175,034 முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

2.2 வருமான முகாமைத்துவம்

2.2.1 வியாபார உரிமைக் கட்டணம்

(அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 126 இன் (vii)(8) மற்றும் (xxx) ஆம் உபபிரிவுகள் மற்றும் 2014 ஜனவரி 17 ஆம் திகதிய 1846 ஆம் இலக்க இலங்கை சனநாயாக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தல்களின் பிரகாரம் சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள 566 வியாபார நிலையங்களுக்கான வியாபார உரிமைக் கட்டணம் மற்றும் வியாபார நிறுவனங்களால் தங்களின் விற்பனைப் பொருட்களை விளம்பரப்படுத்துவதற்கான விளம்பர கட்டணம் என்பவற்றிற்காக அறவிடப்படவேண்டிய ரூபா 580,675 தொகையை உரிய வியாபார நிலையங்களிலிருந்து அறவிடுவதற்கு கணக்காய்வுத் திகதியான 2015 மே 25 ஆம் திகதி வரை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தொலைத் தொடர்பு கோபுரங்களுக்கான கட்டண அறவிடு

2014 ஜனவரி 17 ஆம் திகதிய 1846 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி அறிவுறுத்தல்களின் பிரகாரம் பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசங்களில் 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட 02 தொலைத் தொடர்பு கோபுரங்களுக்கு மீளாய்வாண்டின் இறுதிவரை அறவிடப்படவேண்டிய ரூபா 436,992 தொகையான உரிமைக் கட்டணத்தை அறவிடுவதற்கு கணக்காய்வுத் திகதியான 2015 மே 25 ஆந் திகதி வரை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறமையின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2012 ஆம் ஆண்டில் வரவேற்பு கோபுரம் (Gate Way) அமைப்பதற்காக பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் மூலம் பெறப்பட்ட ரூபா 592,500 தொகை பயன்படுத்தப்படாது வைப்புக் கணக்கில் காட்டப்பட்டுள்ளது.

(ஆ) 36 கடைகளைக் கொண்ட நிந்தவூர் பொதுச்சந்தை கடைத் தொகுதியில் 19 கடைகள் 2012 ஆம் ஆண்டு தொடக்கம் கணக்காய்வுத் திகதியான 2015 மே 25 வரை மூடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் அக்கடைகளுக்கான மின்சாரக் கட்டணம் ரூபா 52,087 தொகை சபையால் செலுத்தப்பட்டுள்ளது.

(இ) 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு இறுதிவரை சபைக்கு சொந்தமான JCB வாகனத்தை வெளிக்கள வேலைக்காக தனிநபர்களுக்கு வாடகைக்கு வழங்கியதன் மூலம் பெறவேண்டிய ரூபா 1,540,390 தொகையை வாடகைக்கு பெற்றவர்களிடமிருந்து அறவிடுவதற்கு அல்லது உரிய நபர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுப்பதற்கு 2015 மே 25 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட 38 வீதிகளுக்கு மூன்று மொழிகளிலும் பெயர்ப்பலகை வெளிக்காட்சிப்படுத்த ரூபா 980,400 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. கணக்காய்வின் போது பெயர்ப்பலகைகளைத் தயாரிப்பதற்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்தும் உரிய அதிகாரிகளிடமிருந்து நேரடியாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட விலை கோறள் ஆவணங்களின் அடிப்படையில் இப்பெயர்ப்பலகைகளை ரூபா 539,030 தொகைக்கு தயாரித்திருக்க முடியும். எனவே இச் செயற்பாட்டினால் சபைக்கு ரூபா 441,370 தொகை இழப்பு எற்பட்டுள்ளது.

3.2 வாகனப் பாவனை

மீளாய்வாண்டில் சபை 13 வாகனங்களை பயன்படுத்தியதன் மூலம் ரூபா 2,833,695 தொகை எரிபொருள் மற்றும் பராமரிப்புக்காக செலவு செய்யப்பட்டுள்ளது. இவ் வாகனங்களின் பாவனை தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) மீளாய்வாண்டில் நான்கு வாகனங்களுக்கான மாதாந்த எரிபொருள் பொழிப்பு, எரிபொருள் பாவனை கணிப்பீடு மற்றும் வாகன ஓட்டம் வாகன நுகர்ச்சி கணிக்கப்படாமல் 5,432 லீற்றர் ரூபா 640,976 தொகைக்கு எரிபொருள் கொள்வனவு செய்வதற்கு கட்டளைகள் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) மீளாய்வாண்டின் யுன் மாதத்தில் RB - 1530 இலக்க உழவு இயந்திரம் திருத்த வேலைகள் காரணமாக பயன்படுத்தப்படாதிருந்த போதிலும் அக்காலப்பகுதியில் 25 லீற்றர் ஒயில் ரூபா 15,283 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் RB - 1530 இலக்க உழவு இயந்திரம் திண்மக்கழிவகற்றல் சேவைக்காக 106 இயந்திர மணித்தியாளங்கள் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், பயன்படுத்தப்பட்டதற்கான பதிவுகள் வாகன ஓட்ட அட்டவணைகள் பதியப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2014 ஜனவரி 01 தொடக்கம் 2014 பெப்ரவரி 12 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் NA – 0125 இலக்க வாகனம் 106 இயந்திர மணித்தியாலங்கள் பயன்படுத்தப்பட்டமை தொடர்பாக வாகன ஓட்ட அட்டவணை மற்றும் எரிபாருள் பாவனை பொழிப்பு என்பன கணக்காய்வுக்கு சமர்பிக்கும்படி கேட்ட போதிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

3.3 செயற்பாட்டுச் செயற்திறனின்மை

2013 ஆம் ஆண்டில் சபையினால் குறித்தொதுக்கப்பட்ட விசேட மாகாண அபிவிருத்தி உதவித் திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 299,965 பெறுமதியான 35,290 குப்பை சேகரிக்கும் பைகளில் 33,878 பைகள் குறித்த தேவைக்கு பயன்படுத்தப்படாது களஞ்சியத்தில் உள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 உள்ளகக் கணக்காய்வு

ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்திலும் தமது ஆற்றலுக்கு ஏற்றவாறு உள்ளக கணக்காய்வு பிரிவு ஒன்றை உருவாக்கிக் கொள்ள வேண்டுமென மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 2005 நவம்பர் 08 ஆம் திகதிய 03 ஆம் இலக்க உள்ளூராட்சி மறுசீரமைப்புச் சுற்றறிக்கையின் 8 ஆம் பந்தியில் தெரிவிக்கப்பட்டதற்கமைய சபையில் உள்ளக கணக்காய்வு பிரிவு ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

5. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

கீழ்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான முகாமைத்துவம்
(இ) முகாமைத்துவ கட்டுப்பாடு
(ஈ) வாகனப் பாவனை